செ. கு. எண்:151 நாள்:14.08.2014

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 14.8.2014

**மேட்டூர் அணையிலிருந்து,** புள்ளம்பாடி, புதிய கட்டளை மேட்டு வாய்க்கால், கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **மேட்டூர் அணையிலிருந்து** புள்ளம்பாடி, புதிய கட்டளை மேட்டு வாய்க்கால், கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் பாசனத்திற்காக **15.8.2014** முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதன் மூலம், திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள **87,736 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9